**Crl. Misc.39**
**Pg.No.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No.107 / 2025**

Deposition of Witness : LW 1/PW1

| | | | |
|---|---|---|---|
| Name | **கௌசல்யா** | Taluk | |
| Husband Name | **அங்கமுத்து** | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 27.03.2026.** | | | |

1, 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

1) நான் கரூர் முத்தாலாடபுரத்தில் குடியிருந்து, உழவர் சந்தையில் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு யாரென்று தெரியாது. கடந்த 1 1/2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 5 மணி அளவில் நான் கரூர் உழவர் சந்தைக்கு எதிரில் உள்ள காய்கறி தரைக்கடையில் நான் இருந்தபோது யாரோ இரண்டு நபர்கள் குடிபோதையில் அங்கு வந்து என்னிடம் தகராறு செய்து, என்னை கெட்ட வார்த்தையால் திட்டி, என் கன்னத்தில் அறைந்து என்னை அடித்து உதைத்தார்கள், என்னுடன் வேலை பார்க்கும் அழகர் என்பவர் அதை தடுக்கவே, அவரையும் கீழே தள்ளி , நெஞ்சில் உதைத்து, கொலை செய்துவிடுவேன் என கொலை மிரட்டல்விடுத்தார்கள் , அதிகாலை நேரம் என்பதாலும், வெளிச்சம் இல்லாததாலும் வந்த நபர்கள் எனக்கு யாரென்று தெரியவில்லை. சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது.அதில் உள்ள கையொப்பம் மட்டும என்னுடையதுதான். அந்த கையொப்பத்தை எதற்காக போட்டு கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது. **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமில்லை. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

Sd/-T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.

**சாட்சி அரசு தரப்பை ஆதரிக்காததால் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதியளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் கரூர்உழவர் சந்தைக்கு எதிரே காய்கறி தரைக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன் என்றும், 1ம் எதிரி தமிழரசன் என்கிற ரஞ்சித் அடிக்கடி மதுபோதையில் அங்கு வந்து தகராறு செய்து வந்தார் என்றும், 18.07.2024 ம்தேதி இரவு மதுபோதையில் தகராறு செய்தார் என்றும், இந்நிலையில் 19.07.2024 ம்தேதி காலை 6.30 மணி அளவில் நான் கடையில் இருந்தபோது எதிரிகள் இருவரும் அங்கு வந்து என்னை கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்றும், அப்போது உடனிருந்த 2ம் எதிரி என்னை கன்னத்தில் அறைந்தார் என்றும், இருவரும் சேர்ந்து என்னை அடித்து உதைத்தார்கள் என்றும் அப்போது எனது கடையில் வேலை பார்க்கும் அழகர் அதனை தடுக்கவே, அவரையும் கீழேதள்ளி , நெஞ்சில் உதைத்தார் என்றும், 1ம் எதிரி அருகில் கிடந்த கட்டையை எடுத்து கொலை செய்து விடுவதாக மிரட்டினார் என்றும், எனக்கு இடது கை மணிக்கட்டு மற்றும் தலையில் வீக்கமும், நெஞ்சில் வலியும் ஏற்பட்டதால் சிகிச்சைக்காக கரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன் என்றும், சிகிச்சையில் இருந்தபோது கரூர் நகர போலிசார் அங்கு வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

Sd/–கௌசல்யா

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.